திட்டங்களையெல்லாம் அறிவித்து, அதைச் செயல்படுத்துவதற்கு உத்தரவிட்டிருக்கின்ற நம்முடைய தன்னிகரில்லாத முதலமைச்சர், பொற்கால ஆட்சியினுடைய முதலமைச்சர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எங்களுடைய துறையின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினை அவருடைய பொற்பாதங்களில் வைத்து வணங்கி, என்னுடைய நன்றியை காணிக்கையாக்கிக் கொள்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பெருகிவரும் மின் பொருட்களின் பயன்பாடு, தொழிற்சாலைகளின் உயர்வு, மக்கள்தொகை உயர்வு ஆகியவற்றால் மின் தேவை அதிகரித்து வருவதைக் கருத்திற்கொண்டு மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகள் அப்போதைக்கப்போது எடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் தலைமையில் ஆட்சி அமையும்போதுதான் மின் உற்பத்தி பெருக, மின்வெட்டைத் தவிர்க்க, எதிர்காலத் தேவையைக் கருத்திலே கொண்டு, தொலைநோக்குப் பார்வையோடு தமிழகம் மின் உற்பத்தியில் மிகை மாநிலமாகத் திகழும்வண்ணம் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் தன்னுடைய அறிவுத் திறத்தால், ஆளுமைத் திறத்தால், தீர்க்கதரிசனத்தால், தமிழகம் மின் உற்பத்தியில் மிகை மாநிலமாகத் திகழ நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். நீலகிரி மாவட்டத்தில் ரூ.7,000 கோடி மதிப்பீட்டில் புனல் மின் நிலையத் திட்டம்; 8,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துணை மின் நிலையங்கள்; 11 இலட்சம் புதிய மின் இணைப்புகள் உள்ளிட்ட ஒளிதரும் அறிவிப்புகள், ஒளிமயமான எதிர்காலம் தெரிகிறது, அதை உருவாக்கிக் கொடுப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என வாழ்த்தும் மக்கள் ஓசையும் கேட்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்களுடைய நன்றியோடு, என்னுடைய நன்றியையும் சேர்த்து மாண்புமிகு அம்மா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

4. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2013–2014 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்மீது விவாதம். (குறுக்கீடு)*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

2013 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *முன்னறிவிப்புகளெல்லாம் என்னுடைய ஆய்விலே இருக்கின்றன. என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள். (குறுக்கீடு) இல்லை, அடுத்த Business–க்கு போயாகிவிட்டது, நீங்கள் இப்பொழுது கேட்கிறீர்கள். (குறுக்கீடு) அதையெல்லாம் என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள், பதில் சொல்கிறேன். (குறுக்கீடு) அறையிலே வந்து கேளுங்கள், நான் உங்களுக்குச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அவையெல்லாம் என்னுடைய ஆய்விலே இருக்கின்றன. திடீரென்று இப்படிக் கேட்க முடியாது. என்னுடைய ஆய்விலே இருக்கின்றன. உட்காருங்கள். (குறுக்கீடு)*

இன்று காலைதான் நீங்கள் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. திடீரென்று கேட்டால் அதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள முடியாது. சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பி, அதற்கு துறையின் பதில் வந்தால்தான் எடுத்துக்கொள்ள முடியும். திரு. ரெங்கராஜன், உட்காருங்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள், இதெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அதை என்னுடைய அறையில் வந்துதான் நீங்கள் கேட்கவேண்டும். (குறுக்கீடுகள்) இப்படி திடீரென்று எழுந்து கேட்டால் அனுமதிக்க முடியாது, உட்காருங்கள். மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

நண்பகல் 12–00

5. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

கோரிக்கை எண் 29–சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2013–2014 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும் மானியக் கோரிக்கை எண் 29—சுற்றுலா–கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை). மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*